මුදල් අමාත්‍යාංශය

நிதி அமைச்சு

# MINISTRY OF FINANCE


මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: BD/ CBP/4/1/16
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2016.03.17

வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல. 1/2016

அமைச்சுக்களின் செயலாளர்கள்,

மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,

திணைக்களங்களின் தலைவர்கள் அனைவருக்கும்

## தொழிற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் அரசாங்க நிறுவனங்களுக்கு வாகனங்களை கொள்வனவு செய்வதற்கான வழிகாட்டல்கள்

2016 வரவு செலவுத்திட்டத்தினால் முன்மொழியப்பட்டவாறு தொழிற்பாட்டுக் குத்தகை முறைமையின் கீழ் அரசாங்க நிறுவனங்களுக்கு வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரத்தினை 2016.03.04 ஆந் திகதிய MF/TIP/03/CM/2016/31 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் முன்மொழிவுக்கமைவாக அமைச்சரவை வழங்கியது. முன்னைய திட்டத்தினைவிட மிகவும் செலவு குறைந்த திட்டமாக இது இனங்காணப்பட்டுள்ளது. இதற்கமைவாக, அனைத்து அரசாங்க நிறுவனங்களும் இதற்குப் பின்னர் வாகனங்கள் கொள்வனவு செய்வது தொடர்பாக இச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்களை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றன.

### 01. தகைமை

அரச உடமை தொழில் முயற்சிகள் உள்ளடங்களாக திரட்டு நிதியத்தின் மூலம் தமது செலவினங்களை மேற்கொள்ளும் அரச உடமை தொழில் முயற்சிகள் இச் சுற்றுநிருப திகதியிலிருந்து வாகனங்கள் கொள்வனவு செய்வது தொடர்பாக இதில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்களை அவசியம் பின்பற்ற வேண்டும். எவ்வாறாயினும், கீழே 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட சில வகை வாகனங்கள் இத்திட்டத்திலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

### 02. பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்

இத்திட்டத்தின் கீழ் வாகனங்கள் கொள்வனவு செய்யப்படும் போது பின்வரும் தேவைப்பாடுகள் பூரணப்படுத்தப்படுத்துதல் வேண்டும்.

2.1 அரசாங்க நிறுவனங்களினால் வாகனங்களுக்கான வேண்டுகோள்கள்

இத் திட்டத்தின் கீழ் வாகனங்கள் கொள்வனவுக்கான அனைத்து கோரிக்கைகளும் குறித்த நிரல் அமைச்சின் செயலாளர்களின் ஊடாக பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். குறித்த நிரல் அமைச்சின் செயலாளர் பிரதான கணக்கீட்டு அலுவலர் என்ற வகையில், அமைச்சின் வாகனங்களுக்கான தேவையினை நியாயப்படுத்துவதற்கு அறிவுறுத்தப் பட்டுள்ளார். வாகனங்களுக்கான அத்தகைய தேவைகள் திறைசேரியின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்படுவதற்கு முன்னர் உரிய நிரல் அமைச்சின் செயலாளரினை தலைவராகக் கொண்ட குழு ஒன்றினால் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். இக் குழுவானது நிறுவனத்தில் தற்பொழுது காணப்படும் வாகனங்களின் எண்ணிக்கை அவற்றின் வயது (மாற்றீட்டிற்காக தற்பொழுது காணப்படும் வாகனத்தின் வயது 10 வருடத்தினை விஞ்சியதாக இருத்தல் வேண்டும்), வாகனத்தின் நிலைமை, பொருட்பட்டியலில் காணப்படும் வாகணங்களின் எண்ணிக்கை, வருடாந்த பராமரிப்புச் செலவினம், ஒப்படைக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை, போக்குவரத்துக் கொடுப்பனவு பெறுகின்ற அலுவலர்களின் எண்ணிக்கை மற்றும் 2015.10.07 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்க அரசாங்க நிதித் திணைக்கள சுற்றுநிருபத்தின் கீழ் விற்பனை செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை என்பவற்றை இக்குழு மீளாய்வு செய்தல் வேண்டும்.

2.2 **பொது திறைசேரியின் அங்கீகாரம்**

அரசாங்க நிறுவனமொன்றினால் இத்திட்டத்தின் கீழ் வாகனமொன்று கொள்வனவு செய்வதற்கு முன்னர் பொது திறைசேரியின் முன் அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். அத்தகைய அங்கீகாரம் உரிய நிரல் அமைச்சின் செயலாளரினது பரிந்துரையின் அடிப்படையில் வழங்கப்படுதல் வேண்டும். அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களினால் விடுக்கப்பட்ட வாகனங்களுக்கான கோரிக்கைக்கு அங்கீகாரம் வழங்குதல் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் வரும் திரட்டிய நிதியத்தினூடாக மாத்திரமென்பதுடன் திரட்டு நிதியத்தினூடாக நிதியளிக்கப்படாத அரச உடமை தொழில் முயற்சிகள் மூலம் வேண்டுகோள் விடுக்கப்படும் வாகனங்களுக்கான அங்கீகரித்தல் அதிகாரியாக பொது தொழில் முயற்சிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் இருப்பார். பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்திற்கான வேண்டுகோள்கள் (தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் அல்லது பொது தொழில் முயற்சிகள் திணைக்களம்) இந்த சுற்றுநிருபத்தின் பின்னிணைப்பு 01 இல் காணப்படும் படிவத்தினை உரிய முறையில் பூரணப்படுத்துவதன் மூலம் உரிய நிரல் அமைச்சின் செயலாளரினது சிபாரிசுக்கமைவாக திணைக்களத் தலைவரின் மூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2.3 **கொள்வனவு செயன்முறை**

மேலே 2.2 ஆம் பந்தியில் கிடைக்கப்பெற்ற அங்கீகாரத்தின் அடிப்படையில் அரசாங்க நிறுவனங்கள் “பயன்படுத்தல் மற்றும் மீளளித்தல்” என்ற தொழிற்பாட்டு குத்தகை முறைமையினூடாக வாகனங்களைக் கொள்வனவு செய்ய முடியும். ஐந்து (05) வருட காலப்பகுதிக்கு (60 மாதங்கள்) வாகனம் வழங்குநர்களினால் (குத்தகை வழங்குநர்) முழுமையான வாகனப் பராமரிப்பு வழங்கப்படுவதுடன் நிரந்தர வாடகை அடிப்படையில் பின்வரும் நிபந்தனைகளைப் பின்பற்றி கேள்வி விலைமனுக் கோரல் செயன்முறையினூடாக அரசாங்க கொள்வனவு நடபடி முறைகள் பின்பற்றப்படும்.

I. **வாகனத்தின் நிலைமை :** இத்திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்படும் வாகனங்கள் புதியதாக அல்லது 1000 கிலோ மீற்றரினைவிட குறைந்தளவு பயன்படுத்தப்பட்ட பதிவு செய்யப்படாத வாகனமாக இருத்தல் வேண்டும்.

II. **தகைமை பெற்ற வழங்குநர்கள் (குத்தகை வழங்குநர்) :** குத்தகை வழங்குநர் இலங்கையில் காணப்படும் உலகப் புகழ்பெற்ற வாகனங்களைக் கொண்ட அங்கீகாரம் பெற்ற வாகன முகவராக அல்லது இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்த நிதி நிறுவனங்களாகவும் ஆகக் குறைந்தது 10 வாகனங்களைக்

கொண்ட கார் குத்தகை சேவைகளை வழங்கும் கம்பனிகளாக (Rent a Car Companies) இருத்தல் வேண்டும்.

III. **வழங்கப்பட வேண்டிய சேவைகள் :** குத்தகை வழங்குநர் விபத்து மூலம் ஏற்படும் திருத்த வேலைகள் அதேபோன்று காப்புறுதி மற்றும் ஏனைய கட்டணங்கள் உள்ளடங்களாக வழமையான அனைத்துச் செலவினங்களையும் பொறுப்பேற்றல் வேண்டும். திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் 24 மணித்தியாலங்களை விட அதிகநேரத்தை எடுக்குமாயின் குத்தகை பெறுநரின் தேவைக்கேற்ப குறுகிய காலப்பகுதியில் அதேவகையான வாகனமொன்றினை குத்தகை வழங்குநர் மாற்றீடாக வழங்குதல் வேண்டும்.

**IV. விலக்களிப்பு :** அரசாங்கத்தின் ஏதேனும் சலுகை அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் இத்திட்டத்தின் கீழ் குத்தகைக்கு விடப்பட முடியாது.

**03. வாகனங்களின் வகைகள்**

இத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட முடியுமான வாகனங்கள் கீழே 04 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட வாடகை வரையறைக்குட்பட்ட வகையில் பின்வரும் விடயங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (அ) | இயந்திரக் கொள்ளளவு : | மோட்டார் கார்கள் | 1300 சீசீ – 2500 சீசீ |
| | | டபிள் கெப்கள் | ஏறக்குறைய 2500 சீசீ |
| | | வான் | ஏறக்குறைய 2500 சீசீ |
| (ஆ) | எரிபொருள்/ இயந்திரவகை : | டீசல்/பெற்றோல்/ஹைபிரிற் | |
| (இ) | ரான்ஸ்மிசன் வகை : | கையிக்க/ தன்னியக்க/ ரைப்ரொனிக் | |

**04. ஆகக்கூடிய மொத்த வாடகை**

குத்தகை திட்டத்தின் கீழ் சாரதிகள் மற்றும் எரிபொருளின்றி ஒப்படைக்கப்பட்ட வாகனங்களைப் பெற்றுக் கொண்ட பல்வேறு வகையான அலுவலர்கள் மற்றும் அலுவலகங்களுக்கான ஆகக் கூடிய மாதாந்த வாடகை வரையறை பின்வருமாறு காணப்படும். வெளிநாட்டு நிதி அளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் உள்ளடங்களாக அரசாங்க நிறுவனங்கள் இத் திட்டத்தின் 03 ஆம் பந்தியில் வழங்கப்பட்ட விடயங்களைக் கொண்டதாக கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்படுவதுடன் மேலே 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அங்கீகாரத்திற்குட்பட்டதாக ஒவ்வொரு உத்தியோகபூர்வ வகுதிக்குமான பின்வரும் வாடகை வரையறை பின்பற்றப்படுதல் வேண்டும்.

| **வகுதி இல.** | **அலுவலர்களின் வகுதி / வாகனங்களின் வகை** | **பெ.சே.வரி நீங்கலாக ஆகக்கூடிய மாதாந்த வாடகை (ரூபா)** |
|---|---|---|
| I. | அமைச்சுக்களின் செயலாளர்கள் அல்லது அதற்கு சமமான தரமுடைய அலுவலர்கள். | 300,000 |
| II. | மேலதிகச் செயலாளர்கள்/பணிப்பாளர் நாயகம் /மாவட்டச் செயலாளர்கள்/பணிப்பாளர் சபைத் தலைவர் அல்லது அதற்குச் சமமான தரமுடைய அலுவலர்கள். | 119,500 |
| III. | சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள் பணிப்பாளர்கள் அல்லது அதற்குச் சமமான தரமுடைய அலுவலர்கள் | 98,700 |
| IV. | குழும வாகனமாக டபிள் கப்ஸ் வாகனங்கள் | 158,000 |
| V. | பயணிகள் வான் - 16 ஆசனங்கள் | 139,100 |

## 05. தொழிற்பாட்டுக் குத்தகையிலிருந்து விலக்களிக்கப்பட்ட வாகன வகுதிகள்

முறையான கொள்வனவு நடைமுறைகளுக்கமைவாக பின்வரும் வாகனங்கள் உரிய நிறுவனங்களினால் கொள்வனவு செய்யப்படமுடியும்.

5.1 **பயன்பாட்டு வாகனங்கள்** - உலவு இயந்திரங்கள், லொறிகள், டரக்குகள், நீர் உறிஞ்சும் பவுசர்கள், பெக்கோக்கள் போன்ற பயன்பாட்டு வாகனங்கள் நிதி ஏற்பாடுகளின் கிடைப்பனவினைக் கருத்திற் கொண்டு பொது திறைசேரியின் அங்கீகாரத்துடன் உரிய நிரல் அமைச்சு/மாகாண சபைகளின் மூலம் நேரடியாகக் கொள்வனவு செய்ய முடியும்.

5.2 **பேருந்துகள்/ அம்புலன்ஸ்கள்/ குறூ கப்கள்/ முச்சக்கர வண்டிகள்/ மோட்டார் சைக்கிள்கள்/ விசேட நோக்க வாகனங்கள்** - இந்த வாகனங்கள் முறையான கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நிதி ஏற்பாடுகளின் கிடைப்பனவுக்கு அமைவாக அரசாங்க நிறுவனங்களினால் கொள்வனவு செய்யப்பட முடியும். முன் அங்கீகாரம் மேலே 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு உரிய திறைசேரித் திணைக்களங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## 06. வழங்குநர் (குத்தகை வழங்குநர்) மற்றும் அரசாங்க நிறுவனம் என்பவற்றுக்கிடையில் உடன்படிக்கை

மேலே குறிப்பிட்ட நிபந்தனைகள் உள்ளடங்களான உடன்படிக்கையொன்று குத்தகை வழங்குநர் மற்றும் அரசாங்க நிறுவனம் ஆகிய திறத்தவர்களுக்கிடையில் கையொப்பம் இடப்படுதல் வேண்டும். அரசாங்க நிறுவனங்களினால் தேவைக்கேற்ப மாற்றங்களுடன் பயன்படுத்த முடியுமான மாதிரி உடன்படிக்கையொன்று திறைசேரியின் www.treasury.gov.lk என்ற இணையதளத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

## 07. கொடுப்பனவு முறை பற்றிய விபரம்

- ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட அரசாங்க நிறுவனத்தினால் வாடகைக் கொடுப்பனவுகள் மாதாந்தம் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் கொடுப்பனவுகளில் நிலுவை ஏற்படுத்த முடியாதென்பதுடன் அடுத்த வருடம் முன்கொண்டுவருதல் வேண்டும். குறித்த நிறுவனத்திற்குத் தேவையான வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் திரட்டு நிதியிலிருந்து வழங்கப்படும். இந் நோக்கத்திற்கான தனியான மீண்டெழும் செலவினக் கணக்கொன்று உருவாக்கப்படும் என்பதுடன் இத்திட்டத்தின் கீழ் ஆதனமொன்று உருவாக்கப்படவில்லை என்பதனால் இச் செலவினம் தொழிற்பாட்டுச் செலவினம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

- திரட்டு நிதியத்திலிருந்து எவ்வித நிதியினையும் பெற்றுக் கொள்ளாத அரசாங்க நிறுவனங்கள் அவற்றினது சொந்த வருமானத்தினைப் பயன்படுத்தி இச் செலவுகளை மேற்கொள்ளுதல் வெண்டும்.

- குறித்த நிறுவனங்களினால் பேணப்படுதல் வேண்டுமென்பதுடன் தொழிற்பாட்டுக் குத்தகை திட்டத்தின் கீழ் நிதி வழங்குவதற்காக வேண்டப்படும் போது திறைசேரிக்கு தேவையான தகவல்களை வழங்குவதற்காக இத் திட்டத்தினூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்கள் தொடர்பான வேறான பதிவொன்று பேணப்படுதல் வேண்டும். இப்பதிவில் வாகனத்தின் வகை, வாடகை பெறுமதி மற்றும் காலம், ஒப்படை அல்லது குழும வாகனம் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

08. அறிவுறுத்தலுக்குப் புறம்பாக நடத்தலும் வாகனங்களைப் பிழையாக நடத்தலும்.

- ஒப்படைக்கப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக போக்குவரத்துக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்கின்ற அலுவலர்கள் இத் திட்டத்தினூடாகப் பெற்றுக் கொள்ளப்படும் வாகனங்கள் உள்ளடங்களாக எத்தகைய உத்தியோக பூர்வ வாகனங்களையும் பயன்படுத்துவதற்கு உரித்துடையவராக மாட்டார்.

- வெளிநாட்டு நிதியினைப் பயன்படுத்தி கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையில் பல வாகனங்கள் குறிப்பீடு செய்யப்பட்டிருப்பினும், செயலாளரினை தலைவராகக் கொண்ட பரிசோதனைக் குழுவினால் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக ஆகக் குறைந்த எண்ணிக்கையிலான வாகனங்கள் கொள்வனவு செய்யப்படுதல் வேண்டும். தனது பதவி அடிப்படையில் உத்தியோக பூர்வ வாகனங்களுக்கு உரித்துடைய அலுவலர்கள் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனம் ஒன்றினை பெற்றுக் கொள்ள முடியாது. இவ் வாகனங்களும் மிகக் கவனமாகவும் சிக்கனத்துடனும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

- இச் சுற்றுநிருபத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த அலுவலர்களுக்கு எதிராக குறித்த நிரல் அமைச்சின் செயலாளரினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

09. முன்னைய சுற்றுநிருபங்களை இரத்துச் செய்தல்

நிதிக் குத்தகை முறையின் கீழ் அரசாங்க நிறுவனங்களுக்கான வாகனக் கொள்வனவு தொடர்பான 2010.12.07 ஆந் திகதிய 150/2010 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபமானது, இச் சுற்றுநிருபம் பயன்வலுப் பெறும் திகதியிலிருந்து பதிலீடு செய்யப்படுகின்றது.

10. தெளிவுபடுத்தல்கள்

இச் சுற்றுநிருபம் தொடர்பான விடயங்களுக்கான ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமாயின் தேசிய வரவு செலவுத்திட்டம் (011 2484689) அல்லது பொது தொழில் முயற்சிகள் திணைக்களம் (011 2484623) என்பவற்றிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

**ஒப்பம் : ஆர்.எச்.எஸ். சமரதுங்க**

**திறைசேரி செயலாளர்**

பிரதிகள் :

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்